Srilanka. Under No.KJV 59/87

பக்கங்கள் -06 விலை 5/=

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

தீபம் -58 ஜ"லை 2004 ஒளி -82

**சிந்தனைச் சுடர்**

மக்களின் எண்ணிக்கையோ, செல்வமோ, வறுமையோ முக்கியமல்ல. சொல், செயல், சிந்தனைகளால் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டிவைக்கமுடியும். இந்த உண்மையை எப்போதும் மறந்துவிடாதீர்கள்.

-சுவாமி விவேகானந்தர்.

### 82வது சர்வதேச கூட்டுறவாளர் தினம்

## கூட்டுறவு இலட்சியங்களை கூட்டுறவாளர்கள் நிறைவேற்ற வேண்டும்

### கூட்டுறவுச் சபைத் தலைவர் வேண்டுகோள்

2004ஆம் ஆண்டு யூலை மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை 82வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் சர்வதேச கூட்டுறவாளர்களால் ஏழு வர்ணக்கொடியைப் பறக்கவிட்டு வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது.

கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோள்களை உணர்த்தும் ஏழு வர்ணக்கொடி மனிதகுலத்தின் வாழ்வில் பெரும் பங்கினை வகித்து வருகிறது. இத்தினத்தில் கூட்டுறவாளர்கள் அனைவரும் கூட்டுறவு இலட்சியங்களை நிறைவேற்றுவதற்கு திடசங்கற்பம் பூண வேண்டும் என்று யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர் பெ.கனகசபாபதி கூட்டுறவாளர்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

82வது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு அவர் ஐக்கிய தீபத்தின் மூலம் கூட்டுறவாளர்களிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கூட்டுறவுத் தத்துவம் ஆட்சியியல் கோட்பாடுகளுக்கு புதிய வளத்தினை ஊட்டுவதாக அமைந்துள்ளது. அது பொருளாதார வெற்றியின்னை ஈட்டவல்ல இயக்கம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. நீதி, சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற கொள்கைகளை கூட்டுறவு இயக்கம் தனது அடிநாதமாகக்கொண்டு திகழ்கிறது.

சகோதரத்துவம் என்பது ஒரு தேசத்தின் எல்லைக்குள் அடங்குவதல்ல. அது கிராம சமுதாயத்திலிருந்து அனைத்துலக சமுதாயத்தினையும் உள்ளடக்கியதாக இருக்கும். (06ஆம் பக்கம் பார்க்க....)

### உலகப் போக்குகளை அவதானித்து

## பொருத்தமான மாற்றங்களை கூட்டுறவாளர் உள்வாங்கிக் கொள்ளவேண்டும்.

### கூ.அ.உ.ஆணையாளர் வேண்டுகோள்

கூட்டுறவு என்பது றொபேர்ட் ஓவனுக்கோ அல்லது றொச்டேல் முன்னோடிகளுக்கோ மட்டுப்படுத்தப்பட்டது என்பது அல்ல. இது எல்லா மனிதர்களுடனும் சம்பந்தப்பட்ட மனித விழுமியங்களுடன் இணைந்த ஒன்றாகும். அதாவது கூட்டுறவு உணர்வு ஒரு உன்னத மனித விழுமியமாகும். இவ்விழுமியங்களுக்கு அடிப்படையாக உள்ள மனித உள்ளத்தில் இருந்துதான் சுயநலமும் அதனை அடிப்படையாகக் கொண்ட போட்டியும் மற்றும் சுரண்டல் மனப்பான்மைகளும் கூட உருவாகின்றன. ஒரே உள்ளத்தில் இருந்து உருவாகும் இவ்வேறுபட்ட உணர்வுகளை ஒப்புநோக்கி கட்டுப்படுத்தி சரியான திசைக்கு இட்டுச் செல்வதற்கு அத்திவாரம் இடும் ஒரு நாளாக இக் கூட்டுறவு தின விழாவை நாம் எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு யாழ்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி 82வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவின் முன்னிட்டு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஆண்டு ஒன்றில் வரிசைக் கிரமமாக வந்துகொண்டிருக்கும் பெரியோர்களது நினைவு நாட்கள் மற்றும் பண்டிகைகள் போன்று கூட்டுறவு தினவிழா என்பதும் ஒவ்வோர் ஆண்டும் தவறாது வந்து கொண்டிருக்கின்றது. அதைக் கூட்டுறவாளர்கள் கொண்டாடிக்கொண்டும் இருக்கின்றனர். இக்கூட்டுறவு தின விழா எதற்காகக் கொண்டாடப்படுகின்றது? நன்றிக் கடன் தீர்க்கும் முகமாகவா? அல்லது ஆத்ம விமோசனத்திற்காகவா? அல்லது கேளிக்கை ஒன்றாகவா? என்பது அவர் அவர்களைப் பொறுத்த விடயமாகும்.

கூட்டுறவு இயக்கம் போன்ற ஒரு இயக்கம் மக்களுக்காக எதையாவது செய்ய வேண்டும். அப்போதுதான் அது ஒரு மக்கள் இயக்கமாக தொடர்ந்து பரிணமிக்க முடியும். விசேடமாக பொருளாதார ஈடேற்றத்திற்கான வழிமுறைகளை அது காட்ட வேண்டும். (06ஆம் பக்கம் பார்க்க....)



1970ஆம் ஆண்டு யாழ்ப்பாண கூட்டுறவு நிறுவனங்களை பார்வையிடுவதற்கு வருகை தந்த றொபேர்ட் ஓவனின் பூட்டி திருமதி.கரோலின் டேல் ஓவன் S.பால்ட்வின் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைத் தலைவர் அமரர் இ.இராசரத்தினம் அவர்களுடன் காணப்படுகிறார்.

படம்: நன்றி 'கூட்டுறவு'

82வது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா மலர் உள்ளே

## றொபேர்ட் ஓவன்

கூட்டுறவின் தந்தையென அழைக்கப்படும் றொபேர்ட ஓவனின் 233வது ஆண்டு பிறந்த தினத்தில் 82வது சர்வதேச கூட்டுறவாளர் தினம் சர்வதேசமெங்கும் கோலாகலமாகக் கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்படுகிறது.

இக்கட்டத்திலே றொபேர்ட ஓவன் எவ்வாறு மனித குலத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உதவியிருக்கிறார் என்பதை ஆராய்தல் சாலவும் பொருந்தும்.

அவர் வாழ்ந்த காலம் தொழிற்புரட்சி மிக வேகமாக வளர்ந்து வந்த காலமாகும். அக்காலத்திலே நிலவிய சமூக அமைப்பினை எதிர்த்து அதனை மாற்றியமைப்பதற்கு மக்களை அவர் தூண்டினார். இவரின் முன்மாதிரி, தேவை ஏற்படின் பொது நலனுக்காக சமூக அமைப்பை மாற்றியமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அவருக்குப் பின்பு வந்த தலைமுறையினருக்கு அகத்தூண்டுகோலாய் அமைந்தது.

றொபேர்ட் ஓவன் கல்வியிலே திடமான நம்பிக்கை வைத்திருந்தார். அவர் பாடசாலைகளை நிறுவியதுடன் கூட்டுறவு மகாநாடுகள், எண்ணங்களையும், கருத்துக்களையும் பரப்புவதற்கு ஏற்ற கருவி என்பதனை உணர்த்தினார். கல்வி மீது அவர் வைத்திருந்த அளவற்ற நம்பிக்கை கூட்டுறவு இயக்கத்திற்கு அவர் விட்டுச்சென்ற ஒரு முதுசமாகும்.

அவர் தொடங்கிய முயற்சிகள் தோல்வியுற்றது உண்மைதான். ஆனால் அவரது இலட்சியங்கள் கூட்டுறவு இயக்கத்துடன் இரண்டறக் கலந்துவிட்டன. சமத்துவம், சமூக உடைமை, ஒருவருக்கொருவர் உதவி, கல்வி. இவையே அவரது இலட்சியங்கள். அவை இன்றும் கூட்டுறவு இயக்கத்தில் உயிர்வாழ்கின்றன.

அவரது தனிப்பட்ட பண்புகளை எமது இளைஞர் பின்பற்றினால் நன்மை பயக்கும். தொழிற்புரட்சியினால் ஏற்பட்ட வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி அவர் தனது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொண்டார். ஆனால் அவர் வெறும் சுறுசுறுப்பு மிக்க இளைஞராக மட்டும் விளங்கவில்லை. அவர் ஒரு சிந்தனையாளராகவும், இலட்சியக் கனவு காண்பவராகவும், ஒருவகைத் தத்துவ ஞானியாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும், மனிதாபிமானியாகவும், தாராள சிந்தையுள்ள தொழில் அதிபராகவும் திகழ்ந்தார்.

ஓவனின் சமூக உடைமை வாதத்திலிருந்துதான் கூட்டுறவு இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட இலட்சியங்களும், கோட்பாடுகளும் தோன்றின. 'பகுத்தறிவு என்ற மரத்திலே ஓவனின் கொள்கைகள் என்ற கிளையின் ஒட்டுச் செய்ததின் விளைவாக கூட்டுறவு இயக்கம் செழித்தோங்கியுள்ளது' என்று அழகாக ஒருவர் வர்ணித்துள்ளார்.



ஓவனின் சமூக உடைமை வாதம் போர்க்கோலம் பூண்டதல்ல. அது அமைதியான, ஆக்கபூர்வமான, கல்வி சார்ந்த, அரசியலுக்கப்பாற்பட்ட சமூக உடைமை வாதமாக மிளிர்ந்தது.

சமூக உடைமை வாதத்தினதும், கூட்டுறவு இயக்கத்தினதும், தொழிற்சங்க இயக்கத்தினதும் தந்தையாக றொபேர்ட் ஓவன் விளங்கினார். அவரது சிந்தனைகள அவரது காலத்திற்கு மிகமிக முற்போக்கானவையாக விளங்கின. ஆனால், இன்றோ அவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன. காந்தீய கோட்பாடுகள் இவரின் கோட்பாடுகளோடு ஒத்திருந்தன. ஓவன் கனவு கண்டது போன்ற கூட்டுறவுக் கிராமங்களை வினோபாஜியும், ஜெயப்பிரகாஷ் நாராயணனும் உருவாக்க உழைத்து வந்தனர். இத்தகைய கிராமங்கள் உருவாகினாற்றான் குடியாட்சி மக்களுக்கு கருத்துச் செறிவுள்ளதாய் இருக்கமுடியும் என்பதனை அவர்கள் நன்குணர்ந்திருந்தனர். ஓவனின் கோட்பாடுகளின் தாக்கம் உண்மையில் அளவிடற்கரியது.

**கூட்டுறவே நாட்டுயர்வு**

# 1995ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு இணையம் பிரகடனப்படுத்திய கூட்டுறவுக் கொள்கைகள் - 7

**1. தன்னிச்சையானதும் திறந்ததுமான அங்கத்துவம்**

கூட்டுறவுச் சங்கமொன்றில் ஒருவர் அங்கத்துவம் பெறுவதை அல்லது பலர் ஒன்று சேர்ந்து கூட்டுறவுச் சங்கமொன்றை உருவாக்குவதை இக்கொள்கை வெளிப்படுத்தி நிற்கின்றது. கூட்டுறவு அமைபின் அங்கத்துவம் தொடர்பாக இக்கொள்கை இரு விடயங்களை வெளிப்படுத்துகின்றது.

அதாவது கூட்டுறவு சங்கங்களில் சேர விரும்புபவர்கள் எவ்விதமான புற நிர்ப்பந்தங்களுமின்றி கூட்டுறவு நிறுவனங்களில் இணைந்துகொள்ளலாம். அவ்வாறே கூட்டுறவு அமைப்பில் இணைந்து பயன்பெற முடியுமெனக் கருதும் ஒருவர் கூட்டுறவு நிறுவனங்களில் இணைந்து கொள்வதற்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாது. கூட்டுறவுச்சங்கமொன்றில் இணைந்து கொள்வதற்கு இன, மத, மொழி, பால் வேறுபாடுகள் தடையாக இருத்தலாகாது. எனவே இக்கொள்கையினை நோக்கும்போது கூட்டுறவுச் சங்கமொன்றில் ஒருவர் அங்கத்தவராவது அவரது தனிப்பட்ட சொந்தவிருப்பின் பெயரில் அமையவேண்டும்.

அதாவது குறிப்பிட்ட ஓர் சங்கத்தினால் வழங்கப்படுகின்ற சேவையின் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நிலையில் இருக்கும் ஒருவர் எவ்விதமான புறநிர்ப்பந்தங்களுமின்றி தனது சுயவிருப்பத்தின் அடிப்படையில் அங்கத்தவராவதை இந்த ஏற்பாடு வலியுறுத்துகின்றது. அதாவது கூட்டுறவுச் சங்கங்களை பயன்படுத்த விரும்புகின்ற ஒருவர் சுயமாக தாமாகவே விரும்பி வந்து கூட்டுறவுச் சங்கங்களில் இணைந்துகொள்ளலாம். இவ்வாறு அவர் கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்துகொள்வதை புறக் காரணிகள் எதுவும் நிர்ப்பந்திக்கக் கூடாது என்பதையும் இக்கொள்கை வலியுறுத்துகின்றது.

சங்கத்தின் சேவைகளால் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கூட்டுறவுச் சங்கமொன்றில் ஒருவர் உறுப்புரிமை பெறுவதை ஏனைய எந்தவொரு புறக்காரணியும் தடைப்படுத்த முடியாது என்பதையும் மேலும் இக்கொள்கை வலியுறுத்துகின்றது.

ஒருவர் கூட்டுறவில் இணைந்துகொள்ள முன்வரும் போது எக் காரணிகளும் அதற்குத் தடையாக இருத்தலாகாது. அவ்வாறே கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து விலகிச் செல்ல விரும்புகின்ற ஒருவர் எவ்வேளையிலும் கூட்டுறவு நிறுவனத்திலிருந்து விலகிச்செல்வதற்கு உரிமை இருத்தல்வேண்டும். மேற்குறித்த விடயங்களை முதலாவது கொள்கையாக தன் விருப்பார்ந்த தடையற்ற திறந்த அங்கத்துவம் என்ற கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

**2. சனநாயக அங்கத்துவக கட்டுப்பாடு**

கூட்டுறவு அமைப்புக்கள் சனநாயக ரீதியிலான நிர்வாகத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கின்றன. கூட்டுறவு நிறுவனங்கள் உறுப்பினர்களால் ஆக்கப்பட்டு உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகின்ற சனநாயக கட்டமைப்பிலுள்ள நிறுவனங்களாகும். அங்கத்தவர்களுக்காக அங்கத்தவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பே கூட்டுறவு அமைப்பாகும்.

அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சம உரிமையுடன் ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் சனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகமும், தலைமையும் கூட்டுறவுச் செயற்பாடுகளையும் வழி நடத்துகின்றன. ஆரம்ப சங்கங்களில் ஒருநபருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையிலே சனநாயக கட்டுப்பாடு பேணப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படும். இரண்டாம் படி சங்கங்களைப் பொறுத்தவரை சனநாயக முறைமை பாதிக்கப்படாத வகையில் வாக்குகள் துணைவிதிகளில் ஏற்பாடு செய்யப்படலாம். கூட்டுறவு அமைப்புக்களில் சனநாயக அங்கத்துவக் கட்டுப்பாடு பின்வரும் வழிகளில் பிரயோகிக்கப்படுகின்றது.

**1. எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ளும் சங்கப் பொதுச் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு. சங்கத்தை வழிநடத்திச் செல்லும்.**

**2. எல்லா உறுப்பினர்களையும் கொண்ட பொதுச்சபைக்கு அதி உயர் அதிகாரம் இருக்கும்.**

**3. சனநாயக கோட்பாடான ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற முறைமை பின்பற்றப்படுதல்.**

**4. பெரும்பான்மை அங்கத்தவர்களுக்கு உடன்பாடான முறையில் சங்கமுகாமைத்துவம் மற்றும் தீர்மானங்கள் செயற்படல்.**

**5. இரட்டைத் தலைமைத்துவம் காணப்படும்.**

மேற்குறிப்பிடப்பட்ட சனநாயக கோட்பாடுகளும் தன்மைகளும் கூட்டுறவு நிறுவனங்களில் பேணப்படல் வேண்டுமென்பதை இவ்விரண்டாவது கொள்கை வலியுறுத்தி நிற்கிறது.

**3. அங்கத்துவ பொருளாதாரப் பங்குகொள்ளல்**

இக்கொள்கையானது கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் மேலதிகங்களை அங்கத்தவர்கள் மத்தியில் எவ்வாறு பகிரப்படவேண்டும் அல்லது கையாளப்படுதல் வேண்டும் என்பது பற்றி எடுத்து விளக்குகின்றது. 1966ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளுள் பங்கு முதலுக்கு வட்டி வழங்குதல், அங்கத்தவர் தொடர்புகளுக்கு ஏற்ப மேலதிகங்களைப் பிரித்து வழங்குதல் என்னும் இரு விடயங்களும் ஒன்றாக்கப்பட்டு, "அங்கத்துவப் பொருளாதாரப் பங்கேற்பு'' என்று ஒரே கொள்கையாக பிரகடனப்படுத்தப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்கள் இலாப நோக்கம் கொண்ட நிறுவனங்கள் அல்ல. அங்கத்துவ பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக்கொண்டு உருவாக்கப்பட்ட நிறுவனங்கள். எனினும் சங்கங்களின் செயற்பாட்டின் போது மேலதிகங்கள் ஏற்படலாம்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுகின்ற மேலதிகங்களுக்கு அங்கத்தவர்கள் சங்கத்துடன் மேற்கொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்களும் தொடர்புகளுமே காரணமாகும். எனவே உண்மையில் சங்கத்திற்குக் கிடைத்த மேலதிகம் அங்கத்தவர்களுக்கே உரியதாகும். எனவே இம்மேலதிகத்தினை அங்கத்தவர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் அங்கத்தவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப அங்கத்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதை இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது. எனினும் கூட்டுறவுச் சங்கங்களில் பெறப்படுகின்ற மேலதிகங்கள் அனைத்தும் அங்கத்தவர் மத்தியில் கட்டாயம் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென்று இக்கொள்கை நிர்ப்பந்திக்கவில்லை. அங்கத்தவர்கள் விரும்பினால் சங்கத்திற்குக் கிடைக்கின்ற இம்மேலதிகத்தினை சங்கத்திலேயே சங்கத்தின் வளர்ச்சிக்காக திரட்டு நிதியாகப் பயன்படுத்த அனுமதிக்கலாம்.

எனினும் அங்கத்தவர்கள் இம்மேலதிகத்தினை பகிர்ந்துகொள்ள விரும்பினால் அங்கத்தவர்கள் பொதுச்சபையொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானம் ஒன்றின் மூலம் பின்வருமாறு பங்கிட்டுக்கொள்ளலாம்.

அங்கத்தவர்களின் பங்குப் பணத்திற்கு குறிப்பிட்ட ஒரு தொகையைப் பங்கிற்கான வட்டியாக வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படுகின்ற வட்டியானது சாதாரண வெளிக்கடன்களுக்கு வழங்கப்படுகின்ற வட்டி வீதத்திலும் பார்க்க குறைந்த வீதமாக இருக்கவேண்டும்.

அதாவது கிடைத்த மேலதிகத்திலிருந்து பங்குப் பணத்திற்கு வட்டி வழங்கப்பட வேண்டுமாயின் அது மிகக் குறைந்த மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டுமென்பது அவசியமாகும். உறுப்பினர்கள் நிதியைப் பங்குப்பணமாக முதலீடு செய்து லாபம் ஈட்டுகின்ற ஒரு நிறுவனமாக கூட்டுறவுச் சங்கங்களைப் பயன்படுத்தக்கூடாது என்பதற்காகவே வட்டி வழங்கப்படுகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் பெறப்படுகின்ற மேலதிகம் அங்கத்தவர்கள் பெற்றுக்கொண்ட பங்கு முதலுக்கேற்ப பகிர்ந்து கொடுக்கப்படுவதில்லை. மாறாக அவர் சங்கத்துடன் செய்து கொண்டுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கேற்ப இம்மேலதிகங்கள் பங்கிடப்படுகின்றது.

அதாவது, சங்கத்திற்கு இம்மேலதிகங்கள் கிடைப்பதற்கு அங்கத்தவர்களுடன் கொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்களே காரணமாக அமைந்தது. எனவேதான் பெறப்பட்டிருந்த இம்மேலதிகமும் அங்கத்தவர்கள் செய்துகொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்பவே பங்கிடப்படுகின்றது.

அங்கத்தவர்கள் விரும்பினால் கிடைக்கின்ற மேலதிகத்தில் ஒரு பகுதியை மேற்படி பங்கு மீது வட்டி, தள்ளுபடி ஆகிய பொருளாதாரப் பங்களிப்புகளுக்காக தமக்குள் பகிர்ந்துகொண்டு மீதி லாபத்தினை சங்க அபிவிருத்திக்காக சங்கத்தின் திரட்டு நிதிக்கு தமது விருப்பப்படி ஒதுக்கிவைப்பதற்கு எவ்விதத் தடையுமில்லை.

தற்போதைய சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைக்கின்ற மேலதிகம் அங்கத்தவர் அல்லாதவருடன் செய்துகொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கு ஊடாகவும் பெறப்படுகின்றது. எனவே இத்தகைய மேலதிகத்தினை அங்கத்தவர்கள் தாம் பகிர்ந்து கொள்ளமுடியாது.

அவ்வாறான மேலதிகங்கள் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்காகவோ அல்லது பிரதேச சமூக பொருளாதார அபிவிருத்திக்கோ பயன்படுத்தப்படலாம். இத்தகைய கோட்பாடுகளைக் கூட்டுறவு நிறுவனங்கள் கடைப்பிடித்தல் வேண்டுமென இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.


**4. இறைமையும் சுதந்திரமும்**

ஜனநாயக அமைப்பான கூட்டுறவு அமைப்பு நன்கு இயங்கவேண்டுமானால் அங்கு முழுமையான சுயாட்சி நிலவுதல் வேண்டும். சுயாட்சி என்பது நிறுவனத்திற்கு எந்தவிதமான நிர்ப்பந்தங்களும் இருக்கக்கூடாது. அங்கத்தவர்கள் சுயாதீனமாகத் தொழிற்பட்டு சங்கத்தினுடைய தொழிற்பாடுகள் தொடர்பாக ஜனநாயக முறையில் தீர்மானங்களை மேற் கொண்டு நடைமுறைப்படுத்துவதைக் குறிக்கும்.

அந்தந்த நாடுகளின் அரச தலையீடுகள் மற்றும் வெளிச்சக்திகளின் தலையீடுகள் என்பன கூட்டுறவின் தனித்துவத்தினையும் கூட்டுறவின் சிறப்புக்களையும் பாதிக்கக் கூடியதாக இருக்கும். இக்கூட்டுறவு அமைப்புகள் சுயாதீனமாக, சுயாட்சியுடையவையாக, சுதந்திரமாக இயங்கவேண்டிய அவசியம் உணரப்பட்டமையால் இக்கொள்கை புதிய கூட்டுறவுக் கொள்கையாக உருவாக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவு அமைப்புகள் தனித்துவமுடையவையாகத் திகழ வேண்டுமாயின் எத்தகைய சக்திகளின் தலையீடும் கூட்டுறவின் பால் இருக்கக்கூடாதெனவும் அவை சுயாட்சி உரிமையுடனும் சுதந்திரமாக செயற்படவேண்டுமென்பதையும் இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

(5ஆம் பக்கம் பார்க்க...)



82வது சர்வதேச கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற சித்திரமும், அதனை வரைந்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர மாணவன் த. தஜேந்திரனும் படத்தில் காணப்படுகிறார்.

## ஒப்பரிய கூட்டுறவாளர் உயர்ந்தே வாழி

சாதிமத பேதமது சற்றேனும் பாராது
சகமதனில் ஏழைகளின் வாழ்வு ஓங்க
ஏதமிகு கூட்டுறவே நாட்டு யர்வாம்
என்றகில மக்களுமே எடுத்தே ஓதும்
வாதமிது வைத்துழைத்து வாழும் தோழர்
வளமொடொரு கவலையுமிங் கில்லை யென்றே
ஓதமிகு பணிகளினை உலகி லாற்றும்
ஒப்பில்கூட் டுறவாளர் உயர்ந்தே வாழி.

-நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.

# 82-வது சர்வதேச கூட்டுறவாளர் தின சிறப்பு மலர் - 2004 - யூலை

## சர்வதேச கூட்டுறவு தினம்

ஒவ்வொரு வருடமும் ஆடிமாதத்தில் வரும், முதலாவது சனிக்கிழமை சர்வதேச கூட்டுறவு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு உலகெங்கிலும் உள்ள கூட்டுறவாளர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. கூட்டுறவு இயக்கம் 1844ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டிலே மலர்ந்தது. கைத்தொழில் புரட்சியினால் ஐரோப்பிய மக்கள் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளுக்குள் சிக்குண்டு தவித்தனர்.

இக்காலப்பகுதியிலே பொருளாதார கஷ்டங்களில் சிக்குண்டு தவித்த ஐரோப்பிய பாமரமக்கள் அப்பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து மீட்சிபெற எடுத்த முயற்சிகளின் போது உருவாக்கிய, தோன்றிய அமைப்பே "கூட்டுறவு" ஆகும்.

கைத்தொழிற்புரட்சிக் காலப்பகுதியில் பொருளாதாரக் கஷ்டங்களிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளைத் தேடி மக்கள் தவித்த வேளையில் திரு.றொபேட் ஓவன் (Mr. Robert owen) அவர்களின் வழிகாட்டலிலே 1844ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் கூட்டுறவு இயக்கம் ஆகும்.

கூட்டுறவு இயக்கமானது ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் 18ஆம் நூற்றாண்டிலேயே பரவி இருந்தது. எனினும் ஆசியநாடுகளில் 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களிலேயே பரவியது.

உலக நாடுகளின் கூட்டுறவு இயக்கத்தின் பொது அமைப்பாக சர்வதேச கூட்டுறவு ஒன்றியம் (INTERNATIONAL CO-OPERATIVE ALLAINCE) 1895ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த சர்வதேச கூட்டுறவு ஒன்றியமே (ICA) இக்காலப்பகுதியின் பின்னர் கூட்டுறவு இயக்கத்தை வளர்ச்சிப்பாதையில் முன்னெடுக்கும் அமைப்பாகச் செயற்படத்தொடங்கியது. இச்சர்வதேச கூட்டுறவு ஒன்றியமே(ICA) 1923ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு தினமாக ஆடிமாதம் முதலாவது சனிக்கிழமையைப் பிரகடனம் செய்து கொண்டாடியது. இவ்வருடம் 2004 ஆம் ஆண்டு 82ஆவது சர்வதேசக் கூட்டுறவு தினம் கொண்டாடப்படுகின்றது.

சர்வதேச கூட்டுறவு தினத்தை கூட்டுறவாளர்களும், கூட்டுறவு நிறுவனங்களும், கூட்டுறவு நிறுவனங்களுடன் தொடர்புடைய ஏனையோரும் விழாவாகக் கொண்டாடுகின்றனர். கூட்டுறவு நிறுவனங்களில் "வானவில்லின்" வர்ணங்களைக் கொண்ட ஏழுவர்ணக் கொடியை ஏற்றி கூட்டுறவு அமைப்பின் பயனையும், பெருமையையும் உலகெங்கும் வெளிப்படுத்துகின்றனர்.

கூட்டுறவுக்கொடி சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தினால் 1923ஆம் ஆண்டில் திரு சார்ள்ஸ் பேரியர் அவர்களினால் வடிவமைக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இச்சர்வதேச கூட்டுறவு தினத்தை இலங்கையிலுள்ள பத்தாயிரத்துக்கும் அதிகமான கூட்டுறவு நிறுவனங்களும், 2 மில்லியனுக்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களான கூட்டுறவாளர்களும், நாற்பதாயிரத்துக்கும் அதிகமான கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களும், ஏனையோரும் வருடா வருடம் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் கூட்டுறவு தொடர்பான பரப்புரைகளைச் செய்வதற்கும் இத்தினத்தில் முன்னுரிமை வழங்கப்படுகின்றது. உலகின் பல பாகங்களிலும் யூலைமாதம் முழுவதுமே கூட்டுறவு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பல முற்போக்கான நிகழ்வுகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்தவகையில் 2004 ஆம் ஆண்டு 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினம் கொண்டாடப்படுகின்றது.

இத்தினத்தில் கூட்டுறவாளர்கள், கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் ஒன்றிணைந்து பல கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்துகின்றனர். இதன்மூலம் கூட்டுறவு தொடர்பான ஒரு விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட ஏதுவாகின்றது.

கூட்டுறவில் ஒன்றிணைந்து கூட்டுறவுக்கொடியின் கீழ் அணிதிரண்டு உலகில் உன்னத கூட்டுறவு இயக்கத்தினை வளர்ப்பதற்கு இத்தினம் ஓர் மைல்கல்லாகச் செயல்பட்டு வருகின்றது

இச்சர்வதேச கூட்டுறவு தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் கூட்டுறவின் பெருமை உலகெங்கும் வெளிப்படுத்தப்படுகின்றது

வாழ்க கூட்டுறவு., வளர்க கூட்டுறவு.

கூட்டுறவான்

## கூட்டுறவுக் கொடிக் கீதம்

**எடுப்பு:**

ஓங்கி எழும் கொடியே ஐக்கியம்
தாங்கிப் போற்றிடும் தக்கவர் பண்பினில்
(ஓங்கி)

**தொடுப்பு:**

வாழ்வழிக்கும் நல்ல வளம்பொருளே ~ நாடு
தாழ்வையும் தகர்த்திடும் தகவோடு சீராக
(ஓங்கி)

**முடிப்பு:**

இம்மையில் உள்ள மக்கள் ஈடிலாங்கிருக்க
செம்மையில் தனித்தும் சேர்ந்ததுமே சமமுற
உம்பருள் இந்திரன் உடையகை வில்லின்
செம்பொருள் நிறமெல்லாம் சிறந்தொழி வீசிட
(ஓங்கி)

## வானவில்லை ஒத்த கூட்டுறவுக் கொடி

வானவில்லின் முடிவில் ஒரு குடம் தங்கத்தைக் காணலாம் என ஒரு பழமொழி வழக்கிலுள்ளது.

வானவில் நல்லவற்றை கொடுக்கும் மனஉறுதியை தருகின்ற ஊற்று எனவும், நம்பிக்கை தரும் அறிகுறி எனவும், சமாதானத்தைக் கொண்டுவரும் தூதுவனெவும், பல வர்ணங்களை (ஏழு) வானவில் எங்கும் ஒற்றுமையை உணர்த்தி நிற்கின்றது.

சர்வதேச கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களையும், இலக்குகளையும் உருவகப்படுத்துவதற்கு வானவில்லின் வர்ணஜாலங்களைக்கொண்ட சித்திரக் கொடியைத் தவிர வேறு எந்தக் கொடியும் பொருத்தமானதாக இருக்கமுடியாது.

வானவில்லைப் போன்று கூட்டுறவு தாழ்ந்தவர்களிடையே நம்பிக்கையும் பல்வேறு முயற்சிகளை உடையவர்களுக்கிடையே ஒற்றுமையையும் அனைவரிடமும் சமாதானத்தையும் கொண்டுவரவுள்ளது. சாதி, மத, நிற வேற்றுமையற்ற இந்தக் கொடி நாடுகளுக்கிடையே நிலவுகின்ற அரசியல் வேற்றுமைகளுக்கிடையே 82ஆவது ஆண்டாக இவ்வாண்டு வானுயரப் பறந்து சர்வதேசமெங்கும் வியாபித்து இருக்கின்ற ஐம்பதுகோடிக்கு மேற்பட்ட கூட்டுறவாளர்களின் அமைதியையும் பக்தியையும் நிலவச் செய்கிறது.

ஒவ்வொரு நாட்டிற்கும் தனக்கே உரிய தேசியக்கொடி உண்டு. இன்றைய தினம் உலகம் முழுவதும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களிலே வானவில்கொடி பறக்கவிடப்பட்டிருக்கும். சர்வதேசக் கூட்டுறவு சம்மேளனம் இக்கொடியினைத் தேர்ந்தெடுத்தற்குரிய காரணங்களைக் கூறுவது சுவையுடையதாகும்.

வானவில்லிலேயுள்ள ஏழு நிறங்களையும் கொண்டதான ஒருகொடி அமைக்கப்பட வேண்டும் என 1923இல் சம்மேளன நிருவாகிகள் தீர்மானித்தனர். இதே கருத்தினை 1896 பரிஸ் நகரிலே சம்மேளனத்தின் இரண்டாவது மகாநாடு நடபெற்றபோது பேர்ணாடோ என்ற பிராஞ்சுக்காரர் வெளியிட்டார். ஆனால் தொடர்ந்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இக்கருத்து மறைந்துவிடாது அதற்கு உயிரளித்து வந்தார் சாள்ஸ் ஜட என்னும் புகழ்வாய்ந்த பிரான்சுக் கூட்டுறவாளர் முப்பது ஆண்டுகளாக ஜீட் இக்கருத்தினை வலியுறுத்தியதோடு, வானவில் கோட்பாடு முதன் முதலாக பிரான்சுக் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக சார்ள்ஸ் வூரியர் என்னும் மேதையாலேயே வெளியிடப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டத்தவறவில்லை. 1837இல் வூரியர் இயற்கை எய்தினார். ஆனால் அவருடைய சீடர்கள் ஒருவரை ஒருவர் ஆண்டுதோறும் சந்திக்கும்போதெல்லாம் இக்கோட்பாட்டினை பேணிவந்தனர். 1923ல் வானவில் கொடி அமைக்கப்படவேண்டும் என ஜீட் முன்மொழிந்தார். ஏழு வர்ணங்களும், வெள்ளைநிறப் பின்னணியிலே பதிக்கப்பட வேண்டும் என்றும் விண்மீன் ஒன்று அதில் சிறப்படையாளமாகப் பொறிக்கப்படவேண்டும் என்றும் அவர் ஆலோசனை கூறினார். இவ்வாலோசனை ஏற்கப்பட்டு அவ்வாறே சம்மேளனத்தின் கொடி அமைக்கப்பட்டது. 1924ல் முதன் முதலாக இக்கொடி கென்ற் என்னும் இடத்தில் நடைபெற்ற மகாநாட்டிலும், பொருட்காட்சியிலும் பறக்கவிடப்பட்டன.

(05ஆம் பக்கம் பார்க்க...)

## கூட்டுறவின் வெற்றிக்கு கூட்டுறவுக் கல்வி அவசியம்

கூட்டுறவை தர்மம் என்றும், சமயம் என்றும் அனைவரும் பேசிவருகின்றனர். வரலாறு தொடங்கிய காலம் முதல் இதன் கோட்பாடுகள் வாழ்வு முறையில் கடைபிடிக்கப்பட்டு வந்தமையை நாம் அறிவோம்.

கூட்டுறவு வாழ்க்கை முறைக்கு பண்டைய கிராமங்கள் தலைசிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்வாழ்க்கை முறை நகரங்களின் வளர்ச்சியினாலும், வர்த்தக வளர்ச்சியினாலும் அருகி வந்துள்ளன. இது கூட்டுறவுக் குடியாட்சியில் இலட்சியங்களுக்கு பாரிய வீழ்ச்சியாகும். கிராமத்தை அடித்தளமாகவைத்துக் கூட்டுறவை கட்டியெழுப்புவதே கூட்டுறவாளனின் இன்றைய கடமையாகும்.

சிறிய சமூகங்களில் தான் கூட்டுறவு அடிப்படையில் அமைந்த வாழ்க்கைமுறை சாத்தியமாகவுள்ளது. உண்மையான மக்கள் குடியாட்சியை நிறுவவேண்டுமானால் சிறிய சமூகத்தினாலேயேதான் அதனை நிலைநாட்ட முடியுமென்பதனையும் கூட்டுறவுக் கல்வி மூலம் மக்களுக்கு உணர்த்தல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களின் வெற்றிக்கு அவற்றின் உறுப்பினர்களே முக்கியமானவர்களாகும். அவர்கள் தமது உரிமைகளை மாத்திரமல்ல கடமைகளையும் தெளிவாக உணர்ந்திருத்தல்வேண்டும். இதற்கு கூட்டுறவுக் கல்வி அவசியம் தேவைப்படுகிறது.

எனவே சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியினை புகட்டுவது கூட்டுறவு இயக்கத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாக இருக்கவேண்டும்.

(05ஆம் பக்கம் பார்க்க...)

# புரியாத அர்த்தங்கள் - 14

**ரோசா மலர்வது முட்செடியில். முட்களை விலக்கி மலரைக் கொய்கின்றோம். அதேபோல நம் உடலில் இயற்கையாகவே உள்ள புலன்களின் சேட்டைகளை நீக்கி பக்தி பெறும் மலரைக் கொய்வதற்கே இறைவன் நல்லறிவைத் தந்துள்ளான்.**

பனிமூட்டம் கலையாத காலைப்பொழுது, தலையில் ஓர் துண்டு கட்டிக்கொண்டு முற்றம் கூட்டிக்கொண்டிருந்தார் செல்லையா. திருமதி செல்லையா வீட்டிலுள்ள பூசை அறையில் சுவாமிப் படங்களுக்கு விளக்கேற்றிவிட்டு தேவாரம் பாடிக்கொண்டிருந்தாள். வயதாகிவிட்டாலும் குரலில் சிறு பிசுறுமின்றி பண்ணோடு பாடும் மனைவியின் இசையை ரசித்தவாறே கூட்டிய குப்பையைக் கடகத்தில் அள்ளிக்கொண்டிருந்தார் செல்லையா. அதேவேளை வாசலில் மோட்டார் சைக்கிள் வந்து நின்ற சத்தம் கேட்டு திரும்பினார். சிதம்பரநாதன் வண்டியை ஸ்ராண்ட் போட்டு நிறுத்திவிட்டு,

''குட்மோனிங் ஐயா'' என்று கூறிக்கொண்டே சிரித்துக் கொண்டு வந்தார்.

''குட்மோனிங் சிதம்பரம். என்ன வீட்டிலை வேலை ஒன்றும் இல்லையா? இங்கே பாரப்பா நான் படுகின்றபாட்டை. ஊரிலை பெரிய மனிசன் என்று மரியாதை. இங்கே ரீச்சர் தேவாரம் பாடுறா. நான் குப்பை கூட்டுறன்'' என்று சிரித்தார்.

''வீட்டுக்கு வீடு வாசற்படிதான் ஐயா. இதே வேலையை நான் நேரத்தோடை செய்துவிட்டு இங்கே வாறன். நீங்கள் கொஞ்சம் பிந்திப்போனியள் அவ்வளவுதான். எங்கடை வீட்டைத் துப்பரவுசெய்வது எங்கடை வேலைதான். காலையில் எழுந்து இப்படிச் செய்வது தேகாரோக்கியத்துக்கும் நல்லதுதானே. முகத்தைக் கழுவிக்கொண்டு வாருங்கோ. நிறைய வேலையிருக்கு'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று நாற்காலியில் அமர்ந்தார்.

வெளியே சம்பாசணை கேட்டு பூசை அறையைவிட்டு வெளியே வந்த திருமதி செல்லையா சிதம்பரநாதனைப், பார்த்துவிட்டு,

''அதுதானே பார்த்தன். இந்தவேளையில் யார் வரப்போகிறார்கள என்று. நீங்கள் ஐந்து மணிக்கு எழுந்து பழக்கப்பட்டவர். இந்த மனுசன் ஜன்னலுக்குள்ளாலை வெய்யில் முகத்திலை பிடிச்சால்தான் எழுந்திருக்கும். ஆகத் செய்யிறது உந்த முன் முற்றம் கூட்டுற வேலை. இந்த வளவு முழுதும் கூட்டினமாதிரி தொணதொணப்பார். அது சரி நளினி எப்படி சுகமாய் இருக்கிறாளா?. வயிற்றுக்குள் இருக்கும் யூனியர் சிதம்பரநாதன் என்ன சொல்லுறானாம்?'' என்று சிரித்தார்.

''எதைக் கதைத்தாலும் கடைசியில் ஒரு ஜோக் அடிக்காமல் விடமாட்டீங்கள் ரீச்சர்'' என்று சிரித்த சிதம்பரநாதன் குடும்ப விடயங்கள் பற்றிக் கூறிக் கொண்டிருந்தார்.

நெற்றி நிறைய விபூதி பூசிக்கொண்டு ''சிவ சிவா'' என்று கூறிக்கொண்டு வந்து சிதம்பரநாதனுக்கு அருகே நாற்காலியில் அமர்ந்தார் செல்லையா.

''இரண்டுபேருக்கும் தேத்தண்ணி கொண்டரட்டுமா? அல்லது சாப்பிடுகின்றீர்களா?'' என்று திருமதி செல்லையா கேட்டார்.

''ரீச்சர், எனக்கு இப்ப சாப்பாடு வேண்டாம். தேநீர் போதும்'' என்றார் சிதம்பரநாதன்.

''எனக்கும் அப்படியேதான். அது சரி மிஸ்டர் சிதம்பரம், காலையில் எழுந்தவுடனேயே வேலை வேலை என்று அப்படி என்னதான் அவசர வேலை?'' என்று சிதம்பரநாதன் பக்கம் திரும்பினார்.

''என்ன அவசரமா? என்தலையில் எல்லாத்தையும் பொறுப்பித்துவிட்டு நீங்கள் சிவனே என்று இருந்துவிடுவீர்கள். இவை எதையும் பெண்டிங்கிலை வைச்சிருந்தா நாளைக்கு 'ஆடிற்' வந்தால் நான்தானே ஓடித்திரிய வேணும். நீங்களும் அவங்களோடை சேர்ந்து, 'என்னப்பா சிதம்பரம். இவற்றை முன்கூட்டியே செய்துவைக்கப்படாதா என்று கேட்பீர்கள்'' என்று தான் கொண்டு வந்த கோவைகளை எடுத்து விரித்து விடயங்களை விளக்கிக் கொண்டிருந்தார்.



''நல்லகாலம் நீரும் இதற்குள் வந்தது. இல்லையென்றால் இந்த மனுசன் சங்கத் தலைவராய் இருக்கும். நான்தான் குப்பைகொட்ட வேண்டியிருக்கும்'' என்று கூறிக்கொண்டே சென்றார் திருமதி செல்லையா.

அரைமணி நேரம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க விடயங்களில் அவர்களிடையே நேரம் போனது தெரியவில்லை. கோவைகளை மூடிவிட்டு தேநீர் பருகினர்.

''அதுசரி சிதம்பரம், அந்தப் பிள்ளை சௌந்தர்யா விடயம் எந்தளவில் நிற்குது?'' என்றார் செல்லையா.

''எல்லாம் செற்றில் பண்ணியாச்சு. திருமணப்பதிவுக்கும் நாள் வைச்சாச்சு. ஏன் ரீச்சர் ஒன்றும் சொல்லவில்லையா?''

''அவ இப்ப ஸ்கூலுக்குப் போய் ஒருவாரம் ஆச்சு. கோவிலுக்கும் போறதில்லை. அதனாலை எதுவும் தெரிந்திருக்காது''.

''சௌந்தர்யா வந்திருந்தாள். எல்லா விடயமும் கூறினாள். உங்களையும், என்னையும், சிதம்பரம் பமிலியையும் எழுத்துக்கு யாழ்ப்பாணம் வர வேண்டும் என்று கூறிவிட்டு சென்றாள். நான்தான் சொல்ல மறந்திட்டன்'' என்று திருமதி செல்லையா கூறினார்.

''பொறுத்தார் பூமியாள்வார் என்பது அந்தப் பிள்ளை விடயத்தில் நடந்திருக்குது. அந்தப் பெடியன் கிருஸ்ணகாந் பற்றி நானும் கேட்காத இடமில்லை. எல்லோரும் அவனைப் பாராட்டுறாங்கள். நல்லபிள்ளை. சௌர்ந்தர்யா கொடுத்துவைத்தவள்'' என்றார் செல்லையா.

''அவளைப் பெண்டாட்டியாக அடைய அவன்தான் கொடுத்துவைத்திருக்க வேண்டும்'' என்று திருமதி செல்லையா தொடங்க இருவரிடையில் சிலநிமிடங்கள் வாதப் பிரதிவாதங்கள். சிதம்பரநாதன் சிரித்துக்கொண்டே அவர்களது உரையாடலைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

வாழ்க்கையில் சிலர் எதற்காகவோ யார் யாருக்காகவோ சம்பந்த சம்பந்தமில்லாது வாதப் பிரதிவாதங்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனால் கிடைக்கப்போவது என்ன? இதன் அர்த்தம்தான் என்ன? சமூகச் சுழற்சியில் இவை எங்கும் நடப்பவைதான்.

இதனடிப்படையை ஆராய்ந்தால் விளங்கிக்கொள்ள முடியாத புதிர்களே விடையாகவிருக்கும்.

நீலவான ஓடையில் பௌர்ணிமை நிலவு நீந்தி மேல் எழுந்துகொண்டிருந்தாள். சாய்வு நாற்காலியில் படுத்துக் கிடந்த கிருஷ்ணகாந் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடும் முகில் அலைகளுக்கிடையே நீந்தி மேலெழும் நிலவு மங்கையின் எழிற்கோலத்தில் சௌந்தர்யாவின் அழகு வதனத்தை ஆலானம் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான். காதல்பைத்தியம் பிடித்தவர்கள் வரிசையில் தானும் ஒருவனாகிவிட்டதை உணராது உள்ளக்களித்தலில் மிதந்தவனை ''தம்பி'' என்ற பெற்றவளின் குரல் சுய உணர்வடையச் செய்தது.

''என்னம்மா'' என்றான்.

'' சாப்பாடு ரெடி. சாப்பிடுவதாயிருந்தால் வாவன்''

''கொஞ்சம் பொறுத்துச் சாப்பிடலாம்''

''சரி! அப்படியே கட்டிலில் கொஞ்சநேரம் நானும் சரிகிறேன். என்னை எழுப்பிவிடு'' என்று கூறிவிட்டுக் கட்டிலில் படுத்துக்கொண்டாள் பஞ்சவர்ணம்.

''உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்லை கா..... உண்டு'' என்று அறியாமலா சொல்லிவைத்தார்கள். எட்டு மணியானால் 'சாப்பாடு ரெடியா என்று கேட்டு குசினி வாசலில் நிற்பவன், சாப்பிட அழைத்தாலும் பொறு என்கிறானே. நானும் உன் வயதிலிருந்துதாண்டா இப்ப கிழவியாய்ப் போனனான். எனக்குத் தெரியாதா?' என்று மனதிற்குள் எண்ணிச் சிரித்தவாறே கண்ணயர்ந்தாள் பஞ்சவர்ணம்.

முதல்நாள் மாலை நடந்தவற்றை மீட்டிப்பார்க்கவே மனம் குதுகலித்தது. எதிர்பாரா சந்தர்ப்பத்தில் நளினியுடன் கதைத்துக்கொண்டிருந்த சௌந்தர்யாவைச் சந்திக்கும்படியாய் அமைந்துவிட்டது.

. சிதம்பரநாதனும், கிருஸ்ணகாந்தும் அவர் வீட்டிற்கு வந்த வேளை சௌந்தர்யா அங்கே நளினியுடன் கதைத்துக்கொண்டிருந்தாள். மோட்டார் சைக்கிள் சத்தம்கேட்டு வெளியே வந்த நளினி உள்ளே வரும்படி இருவரையும் அழைத்தாள். கிருஸ்ணகாந் வருவான் என்று எதிர்பாராத சௌந்தர்யா நாணித் தலைகுனிந்திருந்தாள்.

''நீங்கள் வருவீர்களென்று ரீச்சர் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத சந்திப்புப் பராவாயில்லை. கதைத்துக்கொண்டிருங்கள். நான் உடுப்பு மாற்றிக் கொண்டு வருகிறேன் என்று சிதம்பரநாதன் உள்ளே செல்ல நளினியும் அவரைத் தொடர்ந்து சென்றாள்.

இருவரும் தனிமையில் விடப்பட்டதும் யார் முதலில் கதைப்பது என்று புரியாமல் சில நிமிடநேரம் மௌனமாய்க் கழிந்தது.

''நீங்கள் அனுப்பிய விடயம் படித்தேன். உங்கள் மனத்தை அறிந்துகொண்டேன். எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை'' கிருஸ்ணகாந்தே தயங்கித் தயங்கி முதல் பேச்சை ஆரம்பித்தார்.

''எல்லாம் நல்லபடியாய் அமைந்துவிட்டது. எனக்குத் தாங்கள் நன்றி சொல்ல வேண்டுமா?''

**கே.எஸ்.ஆனந்தன்**

''நிச்சயமாக நீங்கள் எழுதியதல்ல. ஓர் எழுத்தாளரின் வாசகங்களாய் இருந்தாலும் உங்கள் உள்ளத்துணர்வுகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவல்லவா விளங்கியது. அவற்றைப் படித்துக்காட்டவா''

''ஐயையோ வேண்டாமே பிளீஸ்.... பிளீஸ்'' என்று மன்றாடினாள்.

''சௌந்தர்யா! அந்த விடயம் என் மனதில் கொம்பியூட்டரில் பதிவானது போல பதிந்துவிட்டது''

''வாழ்க்கையில் நாம் நினைப்பவையெல்லாம் நிறைவேறிவிடுகின்றதா? இல்லையே! நான் எதையும் என்றும் எதிர்பார்த்ததில்லை.

(05ஆம் பக்கம் பார்க்க..)

## இலக்கியக் காட்சிகள்

கற்பு என்பதற்குப் பலர் பல விதமாக அர்த்தம் செய்திருக்கின்றனர். கற்பெனப்படுவது சொற்றழும்பாமை என்று முன்னோர் கூறினர். கடைச்சங்க நூலான எட்டுத்தொகையில் ஒன்றாகும் 'பதிற்றுப்பற்று' சேர மன்னர்களின் படைச்சிறப்பு, கொடைச் சிறப்புப் பற்றி செப்பும் வரலாற்று இலக்கியம் என்று கூறப்படுகின்றது. இதில் அறக்கற்பு, மறக்கற்பு என்று கண்ணகியின் கற்பு பற்றிக் கூறப்படுகின்றது. கோவலன் இறக்கும் வரை அவள் கொண்டிருந்தது அறக்கற்பு என்றும், இறந்தபின் கொண்டிருந்தது மறக்கற்பு என்றும் கூறப்படுகின்றது. இதனை சிறிய கற்பு என்றும் சீறிய கற்பு என்றும் செப்புவர். அசைந்துவரும் நடையும், ஒளி பொருந்திய நுதலும், மயக்கும் புன்சிரிப்பும், அமிர்த கலசமான சிவந்த வாயும், ஊடல் கொள்ளும் காலத்திலும் கடுகடுவெனப் பேசாது இனிமையாகப் பேசும் பண்பும், அறக்கற்பினையும், அடக்கத்தோடு கூடிய மென்மையான பெண்மையும் உடைய நின் மனைவி நின் பிரிவை எண்ணி வருந்தக்கூடும் என வருந்தும் தலைவனை இங்கே காண்கின்றோம்.

குறித்தகாலத்துள் வந்துவிடுவேன் எனக் கூறி தன் துணைவியை பிரிய மனமின்றி பிரிந்து செல்லும் தலைவன் குறித்தகாலத்துள் திரும்பமுடியவில்லையே என்னும் நிலமை தோன்றும் பொழுது அவள் தன் பிரிவை நினைத்து வருந்துவாளே என்று ஏங்கி வருந்தும் ஓர் தலைவனையே இங்கே பார்க்கின்றோம்.

கடைச் சங்கத்து நூலான எட்டுத்தொகையுள் 'பதிற்றுப்பற்றில்' இப்படியோர் ஒப்பற்ற தலைவனைக் காணலாம்.



ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினும் இனிய கூறும்
இன்னகை
அமிர்து பொதி துவர் வாய்
அமர்த நோக்கின்
சுடர் நுதல் அசை நடை
உள்ளலும் உரியள்.

**பிறைசூடன்**

# 1995ஆம் ஆண்டு சர்வதேச கூட்டுறவு....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி....)

## 5.கல்வியும், பயிற்சி அளிப்பும், தகவலும்

கூட்டுறவு நிறுவனங்கள் கல்வி அபிவிருத்தியில் அக்கறை கொள்ளவேண்டுமென்பது தொடர்பான இக்கொள்கை ஆரம்பகால கூட்டுறவுக் கொள்கைகளுள் இருந்தே இன்றுவரை காலத்திற்குக்காலம் பிரகடனப்படுத்தபட்டு பின்பற்றப்பட்டு வருகின்றது. கூட்டுறவு நிறுவனங்களில், உறுப்பினர்கள், நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கு காலத்துக்குக்காலம் பொருத்தமான கல்வியூட்டல் வழங்கப்படவேண்டும் இதன்மூலம் அவர்களது அறிவையும், ஆற்றலையும் விருத்தி செய்வதோடு இதனூடே கூட்டுறவு நிறுவனங்களையும் அபிவிருத்தி செய்துகொள்ளமுடியும். கூட்டுறவுக் கல்வி என்ற இக்கொள்கை புதிய உலக சூழலுக்கேற்ப விரிவுபடுத்தப்பட்டு கல்வியும், பயிற்சியளிப்பும், தகவலும் என்ற புதிய கொள்கையாக 1995 இல் சர்வதேச கூட்டுறவு ஒன்றியம் பிரகடனப்படுத்தியுள்ளது. இதில் 3 முக்கிய அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

### 1.கல்வி

ஜனநாயகத்தின் அடிப்படை கல்வியாகும். அதாவது ஜனநாயக அமைப்புக்கள் திறமையாகத் தொழிற்பட்டு அதன் இலக்குகளைப் புதிய முறையில் அடைந்துகொள்வதற்கு அவற்றின் உறுப்பினர்களுக்கு அடிப்படைக் கல்வியறிவு அவசியமாகும்.

இங்கு கல்வியெனக் குறிப்பிடப்படுவது பொதுக்கல்வியையும், கூட்டுறவுக் கல்வியையும் உள்ளடக்கியதாகும். உறுப்பினர்கள் தமது உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிப்பதற்கு அவர்களுக்குப் பொதுக் கல்வியறிவு இன்றியமையாததாகும். கூட்டுறவு அமைப்பில் அங்கத்தவர்கள் தமது உரிமைகளையும், கடமைகளையும் உணர்ந்து செயற்பட, அவர்களுக்கு பொதுக்கல்வியுடன் கூட்டுறவுக் கல்வியும் புகட்டப்படல் வேண்டும். அவ்வாறே கூட்டுறவு நிறுவனங்களில் இடம்பெறுகின்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுகின்ற நிர்வாகஸ்தர்கள், பணியாளர்கள் போன்றோருக்கும் பொதுக்கல்வியோடு இணைந்த கூட்டுறவுக் கல்வி புகட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

எனவே இக்கொள்கையின் மூலம் கூட்டுறவுத்துறையுடன் தொடர்புபட்ட சகல தரப்பினருக்கும் பொருத்தமான வகையில் உலகின் புதிய சூழலுக்கும், மாற்றங்களுக்கும் ஏற்ப, கல்வி புகட்டப்படவேண்டுமென்பதை இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

### 2.பயிற்சியளிப்பு

கல்வி புகட்டல் மூலம் ஒருவரது அறிவு வளர்ச்சியடையும். கல்வியின் இறுதிநோக்கம் நிரம்பிய அறிவையும், தெளிவையும் பெறுதல் ஆகும். பயிற்சி என்பது ஒருவரது ஆற்றலை விருத்திசெய்வதனூடாக அவரது மனப்பாங்கு, நடத்தை என்பவற்றினை மாற்றியமைப்பதனைக் குறிக்கின்றது.

கூட்டுறவு அமைப்புகள் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அவற்றின் அங்கத்தவர்களுக்கும், நிர்வாகத்திற்கும், பணியாளர்களுக்கும் கூட்டுறவு தொடர்பாகவும், தொழிற்பாடுகள் தொடர்பான தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும், தொழில்சார் பயிற்சிகளும் அளிக்கப்படல் வேண்டும்.

இத்தகைய தொழில் தொடர்பாக வழங்கப்படும் பயிற்சிகள் மூலம் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களின் ஆற்றல்கள் விருத்திசெய்யப்படல் வேண்டும். இதன்மூலம் தலைமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்தல், தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல்களை விருத்தி செய்தல், மனிதநடத்தைகளைப் புரிந்துகொள்ளும் திறன்களை விருத்திசெய்தல், தொடர்பாடல் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் என்பவற்றை அடைதலை இலக்காகக்கொண்டு இக்கொள்கை சேர்க்கப்பட்டுள்ளது. மாறிவரும் உலக சூழலுக்கேற்ப கூட்டுறவுத்துறையினரின் ஆற்றல்களும் மேம்படுத்தப்படவேண்டியுள்ளது. இன்றைய சூழ்நிலையில் இன்றியமையாத இந்த ஆற்றல்களை கூட்டுறவுத்துறை அங்கத்தவர்கள், பணியாளர்கள், நிர்வாகிகள் மத்தியில் விருத்தி செய்து கூட்டுறவுத்துறை சார்ந்தோரின் மனப்பாங்கை கூட்டுறவுத் தொழில்சார் நடத்தையும் அவர்களிடம் ஏற்படுத்துவதற்குப் பொருத்தமான பயிற்சியளிப்பு நடவடிக்கைகள், கூட்டுறவு அமைப்பில் தொடர்ச்சியாக இடம்பெறல்வேண்டுமெனக் கூட்டுறவுக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

### 3.தகவல்

கூட்டுறவுத்துறை நிறுவனங்களின் செயற்பாடுகள் வினைத்திறன் மிக்க பயனுள்ள வெற்றிகரமான செயற்பாடுகளாக அமையவேண்டுமாயின் தலைமைத்துவம் பொருத்தமான சிறந்த தீர்மானங்களை அவ்வப்போது எடுத்துக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்வாறு தலைமைத்துவம் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தகவல்கள் இன்றியமையாததாகும்.

ஒரு தீர்மானத்தை இயற்றுவதற்கு அவ்விடயம் தொடர்பான பலதரப்பட்ட தகவல்களும் சரிவரத் தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும். தகவல்களில் ஏற்படும் குறைவு, திறமையற்ற தீர்மானம் எடுத்தலுக்கு வழிவகுக்கும். இது நிறுவனத்தைப் பாதிக்கும் என்பதனால் முக்கியத்துவம் பெறுகின்றது.

உலகில் புதிய புதிய மாற்றங்கள் நாளாந்தம் ஏற்பட்டவண்ணம் இருக்கின்றன. இம்மாற்றங்கள் சூழலில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்றைய உலகினை ஒரு பூகோள கிராமமாக மாற்றியிருக்கின்றது.

உலகில் நாளுக்கு நாள் பல்வேறு. மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே நிறுவனத்தை வழிநடத்துபவர்களுக்கு இம்மாற்றங்கள் உடனுக்குடன் தெரியப்படுத்தப்படல் வேண்டும். நிறுவனத் தலைவர்கள் இம்மாற்றங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ளாவிட்டால் அவர்கள் உறுதியான தீர்மானங்களை மேற்கொண்டு நிறுவனத்தை இலக்கு நோக்கி வழிநடத்த முடியாதநிலை ஏற்படும். இது ஒருவேளை நிறுவனத்தின் தோல்விக்கே வழிவகுக்கலாம்,

எனவே சிறந்த தகவல் பரிமாற்ற முறையொன்று நிறுவனத்தில் பேணப்படுதல் நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். இவ்விடயத்தை இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

## 6. கூட்டுறவுகளுக்கு மத்தியிலான ஒத்துழைப்பு

இக்கொள்கை கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 1966இல் இருந்து பிரகடனப் படுத்தப்பட்ட இக்கொள்கை தொடர்ந்து 1995 ஆம் ஆண்டிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் தமது இலக்குகளை அடைந்துகொள்வதை இலகுபடுத்த, விரைவுபடுத்த, உறுதிப்படுத்த அவை தமக்கிடையே ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

கூட்டுறவு அமைப்புக்கள் தமக்கிடையே பிரதேச மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் ஒன்றிணைந்து ஐக்கியப்பட்டு தொழிற்பட வேண்டுமென்பதை இக்கொள்கை வலியுறுத்தி நிற்கின்றது.

## 7. சமூகத்தின் மீதான கவனம்

கூட்டுறவு அமைப்புக்களும் காலத்திற்கேற்ற விதமாக பொருத்தமான மாற்றங்களை அல்லது பொருத்தமான சமுதாய எதிர்பார்ப்புகளை தன்னகத்தே கொண்டிருத்தல் கூட்டுறவுத் துறையின் எதிர்கால அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் மிக அவசியமானதொன்று என்ற அடிப்படையிலே இக்கொள்கை புதிதாக கூட்டுறவுக் கொள்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களும், கூட்டுறவு அமைப்புகளும் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவை சமுதாயத்திற்கு முழு அளவில் நன்மை பயப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். எந்தவொரு அமைப்பும் சமுதாய, சமூக நலன்களில் அக்கறையின்றி இருக்குமேயானால் அந்த அமைப்பை மக்கள் பயன்படுத்த முன்வரமாட்டார்கள்.

எனவேதான் கூட்டுறவு அமைப்புகளும், உறுப்பினர் விடயத்தில் மாத்திரமின்றி அவர்கள் சார்ந்த குடும்ப, சமூக விடயங்களில் மாத்திரமின்றி முழுச் சமுதாயத்தின் மீதுமே அக்கறை காட்டுதல் வேண்டும்.

அதாவது கூட்டுறவுத் துறையின் எந்தவொரு செயற்பாடும் முழுச் சமுதாயத்தினதும் அபிவிருத்தியை மையமாகக்கொண்டு கூட்டுறவு சங்கங்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டுமென்பதை இக்கொள்கை வலியுறுத்துகின்றது.

# கூட்டுறவின் வெற்றிக்கு .....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இதை சுவீடன் போன்ற கூட்டுறவு வளர்ச்சியடைந்த நாடுகளின் வரலாறுகள் மூலம் அறியலாம். கூட்டுறவுக் கல்விக்கு போதிய முக்கியத்துவம் எமது நாட்டில் கொடுக்கப்படவில்லையென்றே கூற வேண்டியிருக்கிறது. இக்கல்விக்கு ஒரு மத்திய நிறுவனம் பொறுப்பாக இல்லாத நிலையினை மேலும் மோசமாக்கியுள்ளது. உத்தியோகபற்றுள்ள நிறுவனங்களும் உத்தியோகபற்றற்ற நிறுவனங்களும் கூட்டுறவுக் கல்வித் துறையிலே தனித்தனியே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதனால் சக்திகள் அவமாக விரயமாகின்றன. ஆதலால் இவற்றிடையே இணைப்பை ஏற்படுத்தி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கும் பின்னணி குறித்து உறுப்பினர்களிடையே தெளிவான விளக்கத்தை ஏற்படுத்த நாம் முனைய வேண்டும்.

எனவே வருங்காலத்தில் கூட்டுறவுக் கல்விக்கு கூட்டுறவுச் சங்கங்களே அதிக பொறுப்பை மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்துகின்றோம். கூட்டுறவு ஆணை ஆய்வுக்குழுவும் இதையே தகவுரை செய்திருக்கின்றது. இதற்கேற்ப நாம் நடவடிக்கைகளை இன்றே மேற்கொள்வோமாக.

# வானவில்லை ஒத்த .....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி....)

1925ஆம் ஆண்டு சம்மேளனத்தின் நிர்வாகிகள் கூடி இப்பொழுதுள்ள அமைப்பைக் கொண்ட கொடியினை வகுத்தனர். இதன்படி ஏழு நிறங்களும் பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டன.

1.சிவப்பு
2.செம்மஞ்சள்
3.மஞ்சள்
4.பச்சை
5.நீலம்
6.கருநீலம்
7.செங்கருநீலம்

எங்கெல்லாம் கொடி பறக்கின்றதோ, அங்கெல்லாம் கூட்டுறவாளர் சுதந்திரத்தையும், பொருளாதார, சமூக சமத்துவத்தையும் அமைதியையும் நிட்சயமாக எதிர்பார்க்கலாம். நோர்வே நாட்டு புராண மரபின்படி வானவில் மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே அமைக்கப்பட்டுள்ள பாலம். இதில் ஓர் ஆழமான கருத்து பொதிந்திருப்பதை நாம் ஊகிக்கலாம். ஆதலால் இத்தகைய சின்னத்தினை கூட்டுறவு இயக்கம் தாங்குவது மிகவும் பொருத்தமாகும்.

சர்வதேச கூட்டுறவு நிறுவனம் மேலும் சிறந்த தொண்டில் வெற்றிகாண இறைவனை வேண்டுவோமாக.

# புரியாத அர்த்தங்கள் .....

(04ஆம் பக்கத் தொடர்ச்சி....)

என் படிப்பு, தொழில் இவற்றிலேதான் என் கவனம் இருந்தது. இப்படியோர் அதிஷ்டத்தை எனக்குத் தருவதற்காகவே ஆண்டவன் மற்றவர்களின் விருப்புக்களை தடுத்துவிட்டான் போலும். ஆண்டவன் எனக்குத் தந்த வாழ்வுக்காக நான் தான் நன்றி சொல்லவேண்டும்" என்றாள்.

"எதுவும் எம் கையில் இல்லை சௌந்தர்யா. இன்னாருக்கு இன்னார் என்று என்றோ நிர்ணயம் கடவுளால் செய்யப்பட்டுவிட்டது. அதுசரி, எப்ப வீட்டுக்குப் போகின்றீர்".

"நாளைக்கு புறப்படலாம் என்றிருக்கிறேன். நீங்கள் எப்ப போகின்றீர்கள்"

"இப்ப புறப்படலாம் என்றிருந்தேன். உங்களைச் சந்தித்த பின்பு காலையில் போகலாம் என்று தீர்மானிச்சாச்சு. வேறு என்ன புதினங்கள்?"

"நீங்கள்தான் சொல்லணும்"

"நான் தான் சொல்ல வேணடுமா? முதலில் நாங்கள் இருவரும் சென்று உங்கள் மாமி மிஸ்சிஸ் ஆறுமுகத்துக்கு நன்றி கூறவேண்டும்" என்று சிரித்துக்கொண்டே கூறினான். அவன் சொன்னதைக் கேட்டு சௌந்தர்யாவும் சிரித்தாள்.

"உண்மையைச் சொல்லப்போனால் நீங்கள் சொல்வது ஹன்றட் பர்சன்ட் சரி. அன்று வீட்டில் எங்களை அவமானப்படுத்திவிட்டாவே என்ற ஆத்திரத்தில் நானும் கண்டபடி கதைத்து அவவை அவமானப்படுத்திவிட்டேன். அவ அப்படி நடந்து அந்த ஆத்திரத்தில் என்னைப் பற்றி தூற்றிக் கதைத்து, அப்பா பேசிய திருமணங்களைக் குழப்பியதால்தான் நீங்கள் எனக்குக் கிடைத்தீர்கள். நீங்கள் விரும்பினால் நிட்சயமாக இருவரும் சென்று நன்றி சொல்வோம்" என்று சிரித்தாள்.

அதேசமயம் ஒரு தட்டில் பிஸ்கட்டுடனும் இன்னுமொரு தட்டில் பால் டம்ளர்களுடனும் வந்த நளினி, "எனது அட்வான்ஸ் வாழ்த்துக்களும், சிறு விருந்தும். திருமணம் முடிந்ததும் தடல்புடலான விருந்தாகப் போட்டுவைக்கின்றேன்" என்று கூறிச் சிரித்தாள்.

"முதலில் நாங்கள் தான் உனக்கு விருந்து வைக்கப் போகின்றோம்" என்று கூறிச் சிரித்தாள் சௌந்தர்யா.

"என்ன சார் இன்றாவது கேட்டீங்களா?"

"நளினி எதைச் சொல்லுகின்றீர்கள்"

"மனதுக்குள் புதிதாய் ஓர் நந்தவனம்.... அது மற்றவர் அறியாமல் பூத்துக்குலுங்குகின்றது"

"ஓ...அதுவா? அதுபற்றி எதுவும் இப்ப கேட்கவேண்டாம் என்று சௌந்தர்யா மன்றாட்டமாயக் கேட்டதாலை என்னால் எதுவும் பேசமுடியலை"

"என்ன சார் நீங்களும் சறண்டரா?"

"அப்படியில்லை சிஸ்டர். எதற்கும் சந்தர்ப்பம் சூழ்நிலை சரியாய் அமையவேண்டுமே. அதனாலே கொஞ்சம் விட்டுத்தான் பிடிப்பமே"

"நாங்கள் எடுத்த முயற்சி உங்களைச் சேர்த்துவைச்சாச்சு. இனி உங்கள் சாமர்த்தியம். என்ன ரீச்சர் எதுவும் பேசாமலிருக்கிறார்கள்?"

"ஏய் நளினி, என்னை அழவைக்கணும் என்று தீர்மானித்துவிட்டாயா? இன்னும் கிண்டலடிச்சே பால்கூட குடிக்காமல் எழும்பி ஓடிவிடுவேன்" என்றாள் சௌந்தர்யா.

"மன்னியுங்கள் ரீச்சர்! நீங்கள் சொன்னது போல செய்தும் விடுவீர்கள்! அப்புறம் அவர் வந்து என்னைத்தான் பேசுவார்" என்று அவளை சமாதானப்படுத்தி உட்கார வைத்தாள்.

அந்த நிகழ்ச்சியை மீட்டுப்பார்த்த கிருஸ்ணகாந் தனக்குத்தானே என்னவோ வாய்விட்டுக் கூறிச் சிரித்துக் கொண்டான்.

மனதுக்குள் புதிதாய் ஓர் நந்தவனம்
-அது
மற்றவர் அறியாமல் பூத்துக் குலுங்கு
கின்றது
மணமாய் மணத்து சதா
மயக்குகின்றது
திரும்பிப பார்ப்பதற்குள்....

(வளரும்)

# தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் கூட்டுறவாளர்களின் பங்களிப்பை எவரும் மறக்கமுடியாது

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கூட்டுறவு அமைப்புக்களும், கூட்டுறவாளர்களும் வழங்கிய பங்களிப்பை தமிழ்பேசும் மக்கள் என்றும் மறக்கமாட்டார்கள் என யாழ். மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சபைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்ற 82ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக சமாதான சூழ்நிலை நிலவி வந்தபோதும் தமிழ்மக்கள் இக்காலத்தில் எத்தனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

அரசாங்கம் சமாதான சூழ்நிலையை சரியாகப் புரிந்து கொண்டு நடக்காவிட்டால் எமது விடுதலைப்போராட்டம் மீண்டும் ஆரம்பமாவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்று கூறினார்.

இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் பொ.சிவலிங்கம், சி.ஐயாத்துரை, மூத்த கூட்டுறவாளர் க.இ.குமாரசுவாமி ஆகியோரும் உரையாற்றினார்கள். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் வழங்கினார். விழா ஆரம்பத்தில் கூட்டுறவுசபைச் செயலாளர் பொ.சண்முகசுந்தரம் விழாவிற்கு சமுகம் கொடுத்தோரை வரவேற்று உரையாற்றினார்.



யாழ்.மா.கூ.சபையின் செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் ஓய்வுபெற்றுச் செல்வதை முன்னிட்டு கூட்டுறவுசபைத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி மலர்மாலை, தங்கப் பதக்கம் அணிவித்த பின் கூ.அ.உ.ஆணையாளர் செ.கனகசபாபதியுடன் எடுத்த படம்.

## பொருத்தமான மாற்றங்களை....

காலாகாலமாக இவ்வியக்கம் ஏழைமக்களின் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொண்டுவர உதவியுள்ளது. ஆனால் இவ்வாறான செய்முறை அல்லது கடமையொன்றை வெற்றிகரமாக தொடர்ந்தும் ஈடுபடுவதற்கு இவ்வியக்கம் உலகப் போக்குகளை அவதானித்து பொருத்தமான மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வது அவசியம். அல்லாவிடின் காலத்திற்கு ஒவ்வாத வழக்கொழிந்த இயக்கமொன்றாக இது மாறிவிடும்.

எனவே இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு கூட்டுறவு தொடர்பான எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவதற்கு ஏற்ற ஒரு சந்தர்ப்பமாக இக் கூட்டுறவுதின விழாவை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கூட்டுறவாளர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.



கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 82ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவில் யாழ்.மாவட்ட தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன் முதன்மை விருந்தினர் உரையாற்றுவதையும், கௌரவ விருந்தினர்களாக கலந்துகொண்டோரையும், விழாவில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம். படத்தில் மூத்த கூட்டுறவாளர் க.இ.குமாரசுவாமியும் காணப்படுகிறார்.

## கூட்டுறவு இலட்சியங்களை...

எல்லா மக்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஆரம்ப சங்கம் பிளவுபட்டுள்ள மக்களை இணைத்து அவர்களை புதிய சமுதாயமாக திகழச் செய்வதற்கு ஏற்றதொரு கருவியாக ஆரம்ப சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட சபைகள் நிதானமாக கலந்துரையாடி முடிவுகளை எட்டும் வழக்கத்தை நாம் கைக்கொள்வோமானால் அது கூட்டுறவிற்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

கூட்டுறவு இயக்கம் எமது பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்ற அமைப்பாக அமைவதுடன் எமது சமூக பண்பாட்டுத் துறைகளையும் கல்வி கலாசாரத்தினையும் விருத்திசெய்வதற்கு ஏற்றதொரு சாதனமாகும்.

எனவே சர்வதேச கூட்டுறவு தினத்தைக் கொண்டாடும் நாம் கூட்டுறவு இலட்சியங்களை நிறைவேற்ற திடசங்கற்பம் பூணவேண்டும்.

## 82ஆவது சர்வதேச கூட்டுறவு தினம்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 82ஆவது கூட்டுறவுதின விழாவைக் கொண்டாடும் முகமாக கடந்த 03.07.2004 சனிக்கிழமை காலை சங்கக் காரியாலயத்தின் முன்றலில் கூட்டுறவுக்கொடி ஏற்றப்பட்டது.

இந்நிகழ்வில் சங்கத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி மற்றும் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் கூட்டுறவின் உன்னதமான தன்மைகளை எடுத்துக்கூறியதுடன் கடந்த மூன்று மாதங்களிலும் உச்ச எல்லைகளைக் கடந்து ரொக்க வியாபாரத்தை மேற்கொண்ட கிளை முகாமையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் ஊக்குவிப்பு வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

| கிளை | முகாமையாளர் | விற்பனையாளர் |
|---|---|---|
| 01A | தி.விக்கினேஸ்வரன் | விற்பனையாளர் இல்லை |
| 01B | இ.குமார் | க.சுசிதரன் |
| 11 | பு.ஜீவானந்தம் | சி.சிவரூபன் |
| 12 | சிறி சுதா | பே.றொபின்ரன் |
| 13 | சி.அன்ரன்யோ அமல்ராஜ் | அ.அருளானந்தம் |
| 17 | கு.ரவிச்சந்திரன் | சி.பரணிதரன், இ.குகானந்தன் |
| மாதிரி | அ.யோகரட்ணம் | க.சபேசன், அ.பிரபாகரன் |
| 20 | கா.கிருபாகரன். | விற்பனையாளர் இல்லை |


**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ:து)**

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்**

**1000 கதிரைகளுடன் வாடகைக்கு விடுதல்**

* உங்கள் திருமண வைபவங்களையும்,
* உங்கள் பிள்ளைகளின் நாட்டிய, இசை அரங்கேற்றங்களையும்,
* உங்களால் நடத்தப்படும் கலை, கலாசார வைபவங்கள், மகாநாடுகள், கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள்

மற்றும் பயிற்சிப் பட்டறைகள் ஆகியவற்றை குறைந்த கட்டணத்தில் நிறைந்த மனத்துடன் நடத்திமுடிப்பதற்கு ''கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை நாடுங்கள்.''

*குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையைப் பெற்றிட*

**செயலாளர்,**
**யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை**
**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,**
**இல: 12, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு உங்கள் மண்டபத் தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

*செயலாளர்,*
*யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை.*


## நிர்வாகிகள் தெரிவு

யாழ் மாவட்ட சி.க.கூ.ச. சமாசத்தின் 2004.06.27 ஆந்திகதிய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவான நிர்வாக உறுப்பினர் விபரம்

திரு.சு.சிவசுப்பிரமணியம், தலைவர், நல்லூர் உ.அ.அ பிரிவு. திரு.ச.செல்வரட்ணம், உப தலைவர், சண்டிலிப்பாய் உ.அ.அ.பிரிவு.

நிர்வாகசபை உறுப்பினர்களாக, செல்வி.நா.சிவராணி, ஊர்காவற்றுறை உ.அ.அ.பிரிவு, திரு.சி.துரைசிங்கம், சங்கானை உ.அ.அ.பிரிவு, திரு.செ.இலகுநாதன், உடுவில் உ.அ.அ.பிரிவு, திருமதி க.நவமணி, தெல்லிப்பளை உ.அ.அ.பிரிவு, திரு.மில்பர் ராஜன், யாழ்ப்பாணம் உ.அ.அ.பிரிவு, திரு.ஆ.தர்மலிங்கம், கோப்பாய் உ.அ.அ.பிரிவு, திருமதி இ.இராசமணி, சாவகச்சேரி உ.அ.அ.பிரிவு, செல்வி.பா.சிறீதேவி, கரவெட்டி உ.அ.அ.பிரிவு, திரு.க.வேல்முருகு, பருத்தித்துறை உ.அ.அ. பிரிவு, திரு.ச.முருகநேசன் பொது மாவட்டம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## 33 ஆண்டுகள் நிறைவு

நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 33 ஆண்டுகள் நிறைவு செய்ததைக் குறிக்கும் முகமாக சங்கத்தின் விவசாயப் பண்ணையில் 33 தேக்கங்கன்றுகள் நாட்டப்பட்டன.

இந்நிகழ்வில் சங்கத் தலைவர் திரு.பெ.கனகசபாபதி, நெறியாளர்குழு உறுப்பினர்கள், பொதுமுகாமையாளர்கள், சங்கப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## புதிய இயக்குநர்கள்

தெல்லிப்பளை ப.தெ.வ:அ.கூ.சங்கத்தின் புதிய தலைவராக பா.கதிரமலை, உபதலைவர் நா.மகேந்திரன், செயலாளர் மு.தவபாலன், இயக்குநர்களாக த.தியாகராஜா, தே.அருள்மொறிஸ், செ.திருஞானம், ஆ.பஞ்சரத்தினம், மா.சிவகுமார், திருமதி ம.மனோரஞ்சிதமலர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 82ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டி முடிவுகள் விபரம்

82ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சங்கப் பணியாளர்கள் மத்தியில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபையினால் நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, வினாடி வினா, நாடகம், மகளிர்குழுப் பாடல் முடிவுகள் விபரம் வருமாறு.

**பேச்சுப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | கென்றிலிஸ்மன் | ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் |
| 2ஆம் இடம் | கிருஷ்ணசாமுவேல் மனோரஞ்சன் | வடமராட்சி கிழக்கு ப.நோ. கூ.சங்கம், மருதங்கேணி. |
| 3 ஆம் இடம் | தா.தவச்செல்வம் | கோண்டாவில் ப.தெ:வ அ.கூ.சங்கம் |
| 4ஆம் இடம் | திருமதி தே.மேரிடொறின் | ஊர்காவற்றுறை ப.நோ. கூ.சங்கம் |
| 5ஆம் இடம் | சி.சிவாநந்தம் | கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம். |

**கட்டுரைப்போட்டி**

| | | |
|---|---|---|
| 1ஆம் இடம் | ப.ரமேஸ்குமார் | நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் |
| 2ஆம் இடம் | கி.வரதராஜன் | அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் |
| 3ஆம் இடம் | சி.ஜெயகௌரி | வேலணை ப.நோ.கூ.சங்கம் |
| 4ஆம் இடம் | ச.பரமானந்தம் | யா.மா.சி.க.வ.கூ.ச.சமாசம் |
| 5ஆம் இடம் | தே.மேரிடொறின் | ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் |

**வினாடிவினாப் போட்டி**

| | |
|---|---|
| 1ஆம் இடம் | யாழ்.மாவட்ட சி.க.வ.கூ.ச.சமாசம் |
| 2ஆம் இடம் | வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் மருதங்கேணி |
| 3ஆம் இடம் | அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம் |

**மகளிர்குழு பாடல் போட்டி**

| | |
|---|---|
| 1ஆம் இடம் | ஆவரங்கால் சிவகாமி சி.க.வ.கூ.சங்கம் |
| 2ஆம் இடம் | பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கம் |
| 3ஆம் இடம் | மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் |
| 4ஆம் இடம் | நவாலி முருகானந்தா சி.க.வ.கூ.சங்கம் |
| 5ஆம் இடம் | சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம் |

**நாடகப் போட்டி**

| | |
|---|---|
| 1ஆம் இடம் | நவாலி முருகானந்தா சி.க.கூ.சங்கம் |
| 2ஆம் இடம் | மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் |
| 3ஆம் இடம் | துன்னாலை சி.க.கூ.சங்கம் |

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல.12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2ஆம் மாடியில் இயங்கும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையினால் 2004ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்டது.